யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
Field Work Centre
FWC

# தவணைப் பரீட்சை, மார்ச் - 2016
# Term Examination, March - 2016

| தரம் :- 12 (2017) | இந்து சமயம் | நேரம் :- 3.00 மணித்தியாலங்கள் |
|---|---|---|

## பகுதி – I

❖ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

❖ 01 முதல் 05 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் 5 விடயங்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று ஏதோவொரு காரணத்தினால் ஏனையவற்றுடன் பொருந்தவில்லை. பொருந்தாததைத் தெரிக.

01) (1) யோகியின் வடிவம் (2) லிங்க வடிவம் (3) பசுபதி வடிவம்
(4) தரைப்பெண் வழிபாடு (5) கொற்றவை வழிபாடு

02) (1) சர்க்கம் (2) பிரதிசர்க்கம் (3) தர்மம்
(4) வம்சம் (5) வம்சானுசரிதம்

03) (1) சிவன் (2) உருத்திரன் (3) இந்திரன்
(4) சோமன் (5) அக்கினி

04) (1) சிவபுராணம் (2) ஸ்கந்தபுராணம் (3) இலிங்க புராணம்
(4) பிரமபுராணம் (5) கூர்மபுராணம்

05) (1) விக்கினேஸ்வரன் (2) வைகுந்தன் (3) ஆருத்ரன்
(4) ஐங்கரன் (5) விநாயகர்

agaram.lk

❖ 06 முதல் 10 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலுமுள்ள ஐந்து 5 சோடிச் சொற்களில் ஒரு சோடி ஒன்றுடன் ஒன்று பொருந்தவில்லை. பொருந்தாத சோடியைத் தெரிக.

06) (1) சிவஞானபோதம் - மெய்கண்டதேவர்
(2) தேவாரம் - சம்பந்தர்
(3) பெரியபுராணம் - சேக்கிழார்
(4) கந்தபுராணம் - கச்சியப்ப சிவாச்சாரியார்
(5) திருத்தொண்டர் திருவந்தாதி - பட்டினத்தார்

07) (1) சிவாகமங்கள் - காமிகம்
(2) வைணவம் - பஞ்சராத்திரம்
(3) சாத்த ஆகமம் - தந்திரங்கள்
(4) காணாபத்தியம் - வைகாசனம்
(5) கௌமாரம் - குமாரதந்திரம்

08) (1) சங்க காலம் - சமயம் வித்திடப்பட்ட காலம்
(2) சங்கமருவிய காலம் - அறநெறிக் காலம்
(3) பல்லவர் காலம் - பக்திநெறிக் காலம்
(4) நாயக்கர் காலம் - மடங்களும் ஆதீனங்களும் எழுச்சி பெற்றது
(5) சோழர் காலம் - பொற்காலம்



Scanned with CamScanner

09) (1) சருக்கம் - சிருஷ்டி
(2) பிரதிசருக்கம் - ஊழியின் பின் உலகத் தோற்றம்
(3) வமிசம் - இருடிகள் போன்றோரின் காலம் அறிதல்
(4) மனுவந்தரம் - கடவுளின் காலத்தை அறிய முற்படல்
(5) வம்சானுசரிதம் - அரசர்களது வம்சங்களை கூறுதல்

10) (1) படைத்தல் - உடுக்கு
(2) காத்தல் - வரதகரம்
(3) அழித்தல் - தீ ஏந்தியகரம்
(4) மறைத்தல் - ஊன்றிய திருவடி
(5) அருளல் - தூக்கிய திருவடி

❖ 11 முதல் 15 வரையுள்ள வினாக்களில் "அ" "ஆ" என்னும் நிரல்களின் கீழ் சில விடயங்கள் தரப்பட்டுள்ளன. "அ" நிரலுக்கு ஏற்ற வகையில் "ஆ" நிரலுடன் பொருத்தமா ஒழுங்கமைக்கப்பட்டுள்ள சேர்மானத்தை தெரிக.

11)

| "அ" | "ஆ" |
|---|---|
| (1) இராஜராஜன் | A – குடைவரைக் கோயில் |
| (2) மகேந்திரவர்மன் | B – விஷ்ணுசீத்தியம் |
| (3) கிருஷ்ண தேவராயர் | C – தஞ்சைப் பெருவுடையார் |
| (4) சமுத்திரகுப்தன் | D – கங்கை கொண்ட சோழேச்சர் |
| (5) இராஜேந்திரன் | E – அகலமேதயார் |

(1) BACDE (2) EDCBA (3) DECBA
(4) CABED (5) ACBDE

12)

| "அ" | "ஆ" |
|---|---|
| (1) மாக்ஸ்முல்லர் | A – தர்மசாத்திரம் |
| (2) அக்கினி | B – அதர்வம் |
| (3) பௌஷ்டிகானி | C – வேதகாலம் |
| (4) மகாபாரதம் | D – தேவதூதன் |
| (5) வியாவகார காண்டம் | E – வியாசர் |

(1) CDBEA (2) BCADE (3) DCEBA
(4) ACBED (5) ECDBA

13)

| "அ" | "ஆ" |
|---|---|
| (1) கோதை | A – பெரியாழ்வார் |
| (2) நம்மாழ்வார் | B – கோவிந்தசாமி |
| (3) விஷ்ணுசித்தர் | C – சடகோபர் |
| (4) சித்தானைக்குட்டி | D – ஆண்டாள் |
| (5) நம்பியாரூரர் | E – சுந்தரர் |

(1) DCABE (2) BCDEA (3) EDCBA
(4) ACBED (5) CDEBA

agaram.lk



Scanned with CamScanner

14)

| "அ" | "ஆ" |
|---|---|
| (1) அந்தணர் | A – மகவான் |
| (2) திருவாவடுதுறை ஆதீனம் | B – நாயக்கர் காலம் |
| (3) இந்திரன் | C – நமசிவாயதேசிகர் |
| (4) இராஜகோபுரம் | D – சகலகலாவல்லிமாலை |
| (5) குமரகுருபர் | E – வேட்டல் |

(1) BACDE (2) EDCBA (3) CBADE
(4) BCADE (5) ECABD

15)

| "அ" | "ஆ" |
|---|---|
| (1) இலிங்கம் | A – கருவறையின் வாயிற்புறத்தே இடப்பக்கத்தில் அமைவது |
| (2) இலிங்கோற்பவர் | B – கோயில் சொத்துக்களைக் கண்காணிப்பவர் |
| (3) தேவி கோயில் | C – கருவறையின் மேற்புறகோஷ்டத்தில் பஞ்சரத்தில் அமைபவர் |
| (4) விநாயகர் | D – சிவன்கோயில் கருவறையில் அமைபவர் |
| (5) சண்டேசுவரர் | E – வலம் வரும் திருச்சுற்றில் தென்மேற்கில் வீற்றிருப்பவர் |

(1) AECBD (2) CDEAB (3) CDEBA
(4) DCAEB (5) DCEBA

❖ பின்வரும் அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு 16 – 18 வரையான வினாக்களுக்கு விடை தருக.

| A | B | C | D | E |
|---|---|---|---|---|
| பட்டர்பிரான் | கோதை | பெரியாழ்வார் திருமொழி | பஜகோவிந்தம் | துளசிச்செடி |
| **F** | **G** | **H** | **I** | **J** |
| சிவகுரு | திருப்பல்லாண்டு | சிவானந்தலகரி | நாச்சியார் திருமொழி | அத்வைதம் |

16) பெரியாழ்வாருடன் தொடர்புடைய தொகுதி
(1) BCD (2) EBD (3) ACG
(4) HBG (5) AGF

17) ஆண்டாளுடன் தொடர்புடைய தொகுதி
(1) AEH (2) HIJ (3) BEI
(4) BHD (5) GBH

18) சங்கரருடன் தொடர்புடைய தொகுதி
(1) AEH (2) GDA (3) BAD
(4) HBD (5) FHJ



agaram.lk
Scanned with CamScanner

❖ சைவசமய வளர்ச்சிப் பின்னணிகள் சில கீழே உள்ளன. அவற்றை அடிப்படையாகக் கொண்டு 19 – 21 வரையான வினாக்களுக்கு விடை தருக.

### மெய்கண்டாரின் பணிகள்

மெய்கண்டார் இறையருள் மிக்கவர். சைவசமயத்துக்கு உயர் தத்துவமாகிய சைவசித்தாந்த சிந்தனையை உருவாக்கியவர் அதன் பொருட்டு அவர் பல பணிகளை மேற்கொண்டார். அவை பற்றிய சில தகவல்கள் வருமாறு.

A - மெய்கண்டார் ஒரு தவப் புதல்வர். திருவெண்காட்டில் உறையும் விசனின் திருவருள் பெற்றவர்.

B - திருஞானசம்பந்தரின் குணவியல்புகளைப் பெற்றவர். திருக்கைலாசப் பரம்பரையில் வந்த பரஞ்சோதி முனிவரிடம் தீட்சாநாமம் பெற்றவர்.

C - சங்ககாலம் முதல் சோழர் காலம் வரையுள்ள காலப்பகுதியில் சைவம் பல்வேறு தத்துவ சிந்தனைகளைக் கொண்டிருந்தது. அவற்றையெல்லாம் ஒருங்கிணைத்து சைவசித்தாந்தம் எனும் கோட்பாட்டினை உருவாக்கியவர்.

D - சைவசித்தாந்தத்தின் பிரமாண நூல் மெய்கண்டார் இயற்றிய சிவஞானபோதமாகும். இந்நூல் 12 சூத்திரங்களையும் 81 உதாரண வெண்பாக்களையும் கொண்டது. இதற்கு வழி நூலும், சார்பு நூல்களும் உண்டு.

E - மெய்கண்டாரிடம் உபதேசம் பெற்றோர் 49 பேர் என்பர். அவர்களுள் அருணந்தி சிவாசாரியார், மனவாசகங்கடந்தார், நமசிவாயதேசிகர், ஞானசம்பந்ததேசிகர் முதலானோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

F - இவரது மாணாக்கர்களுள் சிலர் பல நூல்களையும், மடாலயங்களையும் தோற்றுவித்துள்ளனர். அருணந்தி சிவாசாரியார் வழிநூலாகிய சிவஞானசித்தியாரையும் நமசிவாய தேசிகர் திருவாவடுதுறை ஆதீனத்தையும் தோற்றுவித்தமை குறிப்பிடத்தக்கது.

19) சைவசித்தாந்த உருவாக்கத்தையும் அதன் முதல் நூலின் உள்ளடக்கத்தையும் குறித்து நிற்கும் பொருத்தமான சோடி

(1) AB (2) BC (3) CD
(4) DE (5) EF

20) மெய்கண்டார் தவப்புதல்வர், ஞானி என்பதை வெளிப்படுத்தும் பொருத்தமான சேர்மானம்

(1) AB (2) AD (3) BC
(4) CD (5) EF

21) மெய்கண்டாரின் புலமைக்கும் ஞானத்தின் இருப்புக்கும் பொருத்தமான சேர்மானம்

(1) AB (2) BC (3) CD
(4) DE (5) EF



agaram.lk
Scanned with CamScanner

❖ 22 – 26 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒவ்வொரு தலைப்பின் கீழ் ஒவ்வொரு விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் தலைப்புடன் பொருந்தாததைத் தெரிக.

22) சித்தர்களும் அவர்களது இயல்புகளும் ஈழத்துச் சித்தர்களும்

(1) சித்தத்தை இறைஞானத்தில் வைத்து வழிபாடு செய்தவர்கள் சித்தர்களும்

(2) பிரணாயாமத்தின் மூலம் சித்தம் ஒடுங்கி அட்டாங்கயோக முறையில் வழிபாடாற்றுபவர்கள் சித்தர்களாவர்

(3) அட்டமா சித்திகள் கைவரப் பெற்றவர்கள்

(4) ஈழத்துச் சித்தர்களில் சிலவாக்கியரின் போதனைகள் புரட்சிகரமானவையல்ல

(5) ஈழத்துச் சித்தர்களில் முதன்மையானவர் கடையிற்சுவாமிகள்

23) இறையும், இறை இயல்பும்

(1) இறைவன் ஒருவன் உளன்

(2) அவன் எங்கும் நிறைந்தவன்

(3) அவன் எல்லாம் வல்லவன்

(4) அவன் எல்லாம் அறிபவன்

(5) அவன் இறப்பிற்கும், பிறப்பிற்கும் உட்பட்டவன்

24) மதமும் சின்னமும்

(1) மதம் என்பது முழுமுதற் பொருளான இறைவன் ஒருவனை அடிப்படையாகக் கொண்டது

(2) சைவசமயத்தின் முழுமுதற்பொருள் சிவபெருமான்

(3) சைவர்கள் தமது சமயத்தின் குறியீடாக சிவசின்னங்களைக் கொள்வர்

(4) சிவசின்னங்கள் விபூதி, உருத்திராக்கம் என்பனவாம்

(5) தீட்சை பக்தியையும், முத்தியையும் தரவல்லது என்பர்

25) நாட்டியமும் அழகுணர்ச்சியும்

(1) கலைகள் இறைவனின் படைப்பு என்பது நம்பிக்கை

(2) கதகளி, மணிப்புரி, பரதநாட்டியம் முதலியன இந்திய நாட்டிய மரபில் சிறப்பானவை

(3) கரகாட்டம், காவடி முதலான நாட்டார் கலைகளும் கலைமரபு என்ற வகையில் இதனுள் அடங்கும்

(4) இந்துசமய கலைமரபுகள் அழகுணர்ச்சியையும், பக்தியையும் தரவல்லன

(5) இந்திய நாட்டியக் கலைமரபின் உயர் எல்லையைக் காட்டி நிற்பதாக அமைவது தாண்டவ நாட்டியசிற்ப வடிவமாகும்.

(25 x 2 = 50 புள்ளிகள்)

agaram.lk



Scanned with CamScanner

## பகுதி – II

❖ பகுதி I இல் இரண்டு வினாக்களையும் பகுதி II இல் மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

### பகுதி I

(1) "இந்துசமய வளர்ச்சியில் வேதங்களின் முக்கியத்துவத்தை பின்வருவன தொடர்பு விளக்குக"

i) சமய மரபு
ii) தத்துவ மரபு
iii) சமுதாயம் (7 + 6 + 7 = 20 புள்ளிகள்)

(2) "இந்து சமய நெறியில் காணாபத்திய நெறியும் ஒன்று"

i) தோற்றமும் வளர்ச்சியும்
ii) திருவுருவத் தத்துவம்
iii) வழிபாட்டு முறைகள் (7 + 7 + 6 = 20 புள்ளிகள்)

(3) "வைதீக ஒழுகலாறுகளைப் பேணும் வகையில் தோற்றம் பெற்றவையே புராண இதிகாசங்களாகும்"

i) "புராணம்", இதிகாசம் ஆகிய சொற்பதங்களின் பொருள்
ii) மகாபாரதம் கூறும் அறநெறிப் பண்புகள்
iii) மகாபுராணங்களின் வகை (5 + 10 + 5 = 20 புள்ளிகள்)

### பகுதி II

(4) "மேல்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டு சுந்தரமூர்த்திநாயனார் பற்றி விபரிக்குக"

i) வாழ்ந்தகாலச் சூழ்நிலை
ii) வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்
iii) இறைநிலைப்பாடு, அற்புதம், பணிகள் (4 + 10 + 6 = 20 புள்ளிகள்)

(5) " சித்தத்தை சிவன்பால் வைத்தவர்கள் சித்தர்கள்"

i) சித்தர்களின் இலக்கணத்தை வரைவிலக்கணப்படுத்துக.
ii) சித்தர்களின் இயல்புகளை எடுத்துக்காட்டுக.
iii) ஈழத்துச் சித்தரெனக் கருதப்படும் நவநாதச்சித்தரை நீர் சித்தராக ஏற்றுக்கொள்வதற்குரிய காரணங்களை விபரிக்குக. (5 + 10 + 5 = 20 புள்ளிகள்)

(6) "பல்லவர் காலத்தில் வைதீக சமயம் பெற்ற வளர்ச்சியை கீழ்வரும் தலைப்புகளில் விளக்குக"

i) பல்லவர் காலத்தில் பக்தியியக்கத்தின் எழுச்சி
ii) ஆலயங்கள்
iii) அரசர்களும், ஆற்றிய பணிகளும் (7 + 6 + 7 = 20 புள்ளிகள்)

(7) "இறைவன் எழுந்தருளி அருள்பாலிக்கும் இடம் ஆலயமாகும்"

i) திருக்கோயிலுக்கு எப்படிச் செல்ல வேண்டும்?
ii) திருக்கோயிலுக்கு சென்றவுடன் யாது செய்தல் வேண்டும்?
iii) திருக்கோயிலொன்றின் தர்மகர்த்தாவாக உம்மைக் கருதிக்கொண்டு நீர் அக்கோயிலின் மகோற்சவ காலத்தின் போது மெய்யடியார்களின் தேவையின் பொருட்டு மேற்கொள்ளும் நடவடிக்கைகளைக் குறிப்பிடுக. (6 + 7 + 7 = 20 புள்ளிகள்)

(8) எவையேனும் நான்கிற்கு சுருக்கமான குறிப்பு எழுதுக.

i) திருவாவடுதுறை ஆதினம்
ii) நடராஜ மூர்த்தம்
iii) பெரியாழ்வார்
iv) சூரியவழிபாடு
v) விக்கிரகவியல்
vi) கந்தசஷ்டி (4 x 5 = 20 புள்ளிகள்)



agaram.lk

Scanned with CamScanner

யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2016
## Term Examination, March - 2016

FWC

| இந்துசமயம் | புள்ளித்திட்டம் | தரம் :- 12 (2017) |
|---|---|---|

### பகுதி – I

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01) | 5 | 06) | 5 | 11) | 4 | 16) | 3 | 21) | 5 |
| 02) | 3 | 07) | 4 | 12) | 1 | 17) | 3 | 22) | 4 |
| 03) | 1 | 08) | 1 | 13) | 1 | 18) | 5 | 23) | 5 |
| 04) | 4 | 09) | 4 | 14) | 5 | 19) | 3 | 24) | 2 |
| 05) | 2 | 10) | 2 | 15) | 4 | 20) | 1 | 25) | 4 |

(25 x 2 = 50 புள்ளிகள்)

### பகுதி – II

### பகுதி I

01) i)
- பயத்தின் அடிப்படையில் இறைவழிபாடு
- மானசீக வழிபாடு
- மூவகைத் தெய்வம்
  1. விண்சார் 2. மண்சார் 3. இடைநிலை தெய்வங்கள்
- இசை வழிபாடு (உதாரணம் - சாமவேதம்)
- ஒரு தெய்வ வழிபாடு (உதாரணம் - ஏகம் சத் விப்ர வஹீத வாந்தி ..” சுலோகம்
- பண்டமாற்று வழிபாடு
- ஹோமம், யக்ஞம், தோத்திரம், மந்திரோபாசனை
- ஸ்ரீருத்திரிய வழிபாடு (உதாரணம் - யசுர்வேதம்) (7 புள்ளிகள்)

ii)
- தத்துவம் என்பது உண்மை பற்றியது, ஆராய்ச்சி பற்றியது, ஆராய்ச்சியும், ஆராய்ச்சி பூர்வமான முடிவுகளைக் கொண்டது.
- இருக்கு வேத 1ஆம், 10 ஆம் மண்டலங்களில் உள்ள பிரமம், ஆன்மா, பிரபஞ்சம், வினைப்பயன், மறுபிறப்பு தொடர்பான கருத்துக்கள்
- பலதெய்வக்கோட்பாடு பிற்காலத்தில் ஒருபொருட்கோட்பாடாக வளர்ச்சி
  – 1:163:46 பாடல்
- இருக்கு வேதத்திலுள்ள யமசூக்தம், இறப்புப் பற்றிய பாடல்களில் உள்ள கருத்துக்கள்
- வருணசூக்தம் -
  வருணன் ஒழுக்கத்தின் அதிபதி
  உலக ஒழுக்கத்தைப் பேணுபவன், கண்காணிப்பவன்
  ரிதாயு, ரிதசயகோபா
- நாஸதீயசூத்தம் -
  இந்து மெய்யியலில் வலியுறுத்தப்படும் ஒருமை வாதத்தின் ஆரம்பநிலை பற்றிய கருத்துக்கள் (6 புள்ளிகள்)

agaram.lk



Scanned with CamScanner

iii) • தந்தைவழிச் சமுதாயம்
- தலைவன் – கிருகஸ்பதி, தலைவி – சகதர்மினி
- உணவு – காய், கனி, கிழங்கு, தானியம், ஜவம், சோம பாணம்
- வீடுகள் -
  மண், மரத்தாலானது
  கூரை புற்களால் வேயப்படல்
- நோய்கள் - யஷ்மா, ஷயம்
- பொருளாதாரம்
  - பண்டமாற்றுப் பொருளாதாரம்
  - விவசாயம், வாணிபம், அணிகலன்கள், ஆயுதங்கள் செய்தல்
- பொழுதுபோக்கு
  யானை ஏற்றம், குதிரை ஏற்றம், வில்யுத்தம், மல்யுத்தம்
- நால்வகை வர்ணத்தவர்
- குருகுலக் கல்விமுறை
- சபா, சமிதி (7 புள்ளிகள்)

02) i) • மரபு வழியில் சண்மதங்களில் ஒன்று வேதங்களில் உருவ வழிபாடு இல்லாத போ கணபதி பற்றிய கருத்துக்கள் இல்லாத போதும் கணபதி பற்றிய கருத்துக் உள்ளன.
  உதாரணம் - "கண்ணாம் ததுவா கணபதிகும் அவா மஹே"
- வேதத்தில் கவிஞர்களின் கவிஞன், ஞானிகளின் ஞானி என சுட்டப்படல்
- கி.மு 4 ஆம் நூற்றாண்டு குப்தர் காலத்திலும் இருந்துள்ளது
  (உதாரணம் - இலக்கியம், தொல்பொருட்கள் சான்று)
- கி. மு 6, 7ஆம் நூற்றாண்டில் தக்கணத்திலுள்ள குகைக்கோயில்கள் சிலவற் கணபதி சிலைகள்
- ஏரம்ப உபநிடதம், கணபதி உபநிடதங்களிலுள்ள கணபதி பற்றிய கருத்துக்கள்
- பல்லவர் காலம் - கணபதியின் ஆலயங்கள்
- சோழர் காலம் - கணபதி விக்கிரகங்கள்
  நம்பியாண்டார் நம்பி, பொல்லாப் பிள்ளையாரின் அருள் பெறல் (7 புள்ளிகள்)

agaram.lk

ii) • திருவுருவங்கள் ஆசனநிலை, நிற்கும் நிலை, நடன நிலை
- பஞ்சதள அளவுப் பிரமாணம்
- யானை முகம் - விஷ்ணுரூபம்
  கண்கள் - சிவரூபம்
  வலப்பாகம் - சூரியரூபகம்
  இடப்பாகம் - சக்தி ரூபம்
- விநாயகர் - தனக்கு மேல் தலைவன் இல்லாதவர்
- ஐந்தொழில்களை உணர்த்தும் தத்துவம்
  - எழுத்தாணி பிடித்தகரம் - படைத்தல்
  - மோதகம் ஏந்தியகரம் - காத்தல்
  - அங்குசம் ஏந்திய கரம் - அழித்தல்
  - அமுத கலசம் - அருளல்
  - பாசம் ஏந்திய கரம் - மறைத்தல்



Scanned with CamScanner

iii) • ஆலயம், இல்லங்களில் நடைபெறும் கிரியைகளில் முதன்மை இடம்
• மஞ்சள் மா, அரிசிமா, சாணம் முதலியவற்றில் உருவம் அமைத்து வழிபடும் மரபு – அறுகம்புல் சிறப்பானது.
• ஆலயங்களில் நைமித்தியக் காலத்தில் காயத்ரிமந்திரத்துடன் கூடிய கணபதி ஹோமம்
• பிள்ளையார்கதை, விநாயகர் சதுர்த்தி, விநாயகர் சஷ்டி
• தோத்திரங்கள் மூலம் வழிபடல்
• பல்வேறு நிவேதனங்கள் படைத்து வழிபடல்
உதாரணம் - மோதகம், வடை

03) i) புராணம் - பழைமையானது, தொன்மையானது, பூரணமானது
இதிகாசம் - இது இவ்வாறு முன்பு நடந்தது எனப் பொருள்படும். (6 புள்ளிகள்)

ii) • இதிகாசங்களில் ஒன்று
• கி. மு 6ம் நூற்றாண்டில் தோற்றம் பெற்றது. இது 18 பருவங்களை உடையது.
• அறுவகைச் சமயங்களை அறிய மூலமாக அமைகின்றது.
• விஷ்ணுவின் அவதாரமான கிருஷ்ண அவதாரத்தைப் பற்றிக் கூறுகின்றது.
• இராஜதர்மம் உயர்நிலையில் போதிக்கப்படல்
• பகவத்கீதை உயர்ந்த அறநெறிக் கருத்துக்களைக் கூறுகின்றது.
• மகாபாரத சாந்த பருவத்தில் "அறத்தால் வருவதே உண்மை" எனப்படுகிறது.
• வீஷ்மபர்மம், துரோணபாவம் என்பன அரசதர்மங்கள் என குறிப்பிடுகின்றது.
• பிரமச்சரியம், இல்லறம், வானப்பிரஸ்தம், சந்நியாசம், என்பவற்றையும், விரத வழிபாடு, தீர்த்த யாத்திரை, தலம், உருவ வழிபாடு என்பவற்றினூடாக தர்மநெறி பேணப்படுகின்றது.
• தர்மன் எனும் கதாபாத்திரம்

iii) மகாபுராணங்கள் 18 உபபுராணங்கள் 18 இவை வட மொழியில் தோற்றம் பெற்றன.
மகாபுராணங்களாவன

சிவபுராணம் - 10
சிவபுராணம், இலிங்கபுராணம், மச்சயபுராணம், கூர்மபுராணம், ஸ்கந்தபுராணம் வராகபுராணம், வாமனபுராணம், பிரமாண்டபுராணம், மார்க்கண்டேயபுராணம்

விஷ்ணு புராணம் - 4
விஷ்ணு புராணம், கருட புராணம், பாகவத புராணம், நாரதீய புராணம்

பிரமபுராணம் - 2
பிரமபுராணம், பத்மபுராணம்

அக்கினிபுராணம் - 1
ஆக்னேய புராணம்

சூரிய புராணம் - 1
பிரமகைவர்த்தன புராணம் (5 புள்ளிகள்)


agaram.lk
Scanned with CamScanner

## பகுதி II

04) i) காலம் - கி.பி 9ம் நூற்றாண்டு, பல்லவர்காலம் சூழ்நிலை – சைவம் வளம் பெற்றிருந்த காலம்

ii) இடம் - திருமுனைப்பாடி நாட்டு திருநாவலூர்
தந்தை – ஆதி சைவ வேதியரான சடையனார்
தாய் - இசைஞானியார்
பிள்ளைத் திருநாமம் - நம்பியாரூரர்
பிறபெயர்கள் - ஆளுடையநம்பி, வன்றொண்டர், திருநாவலூர் தம்பிரான் தோழர் சேரமான் தோழர்

- அரசன் நரசிங்க முனையருடன் வாழ்ந்தவர்
- திருமணச் சடங்கும் தடுத்தாட்கொள்ளப்பட்டவர்
- "பித்தாபிறைசூடி.." எனும் பதிகம் பாடியவர்
- "வன்தொண்டன்" என்ற நாமம் பெற்றவர்
- தம்பிரான் தோழராதல்
- பரவையாரைத் திருமணம் செய்தவர்
- திருத்தொண்டர் தொகை பாடியவர்
- சிங்கடியப்பன் வனப்பகையப்பனானவர்
- சங்கிலியாரை மணந்தவர்
- திருக்கையிலைக்கு வெள்ளை யானையில் சென்றவர்

(10 புள்ளிகள்)

iii) **அற்புதங்கள்**

- சிவபிரானின் திருவருளால் தடுத்தாட்கொள்ளப்பட்டமை
- சிவபெருமானால் வன்றொண்டர் எனும் நாமம் சூட்டப்பெற்றமை
- திருவடிதீட்சை பெற்றமை
- சிவபிரான் நம்பியாரூரரைத் தோழமையோடு ஏற்றமை
- தம்பிரான் தோழர் எனப்பட்டமை
- தில்லைவாழ் அந்தணர் தம் ........" என்று சிவபிரான் அடியெடுத்துக் கொடுக்க திருத்தொண்டர் தொகை பாடியமை

**பணிகள்**

- குண்டையூர்க்கிழார் பொருட்டு நெல் பெற்றமை
- செங்கட்டிகள் பொன்கட்டிகளாக்கியமை
- ஆற்றிலிட்ட பொன்னைக் குளத்தில் எடுத்தமை
- முதலை வாய்ப்பட்ட சிறுவனை இறைவன் திருவருளால் முதலை வாயினின்று மீட்டுக்கொடுத்தமை
- திருத்தொண்டர் தொகை பாடி அருளியமை

05) i) சித்துக்களை இறைஞானத்தில் வைத்து வழிபாடு இயற்றுபவர்கள் சித்தர்களாவர்.

ii)
- அட்டமாசித்திகள் கைவரப்பெற்றவர்கள்
- யோகமார்க்கத்தில் வல்லவர்கள்
- யோகநெறி நின்று பல சித்திகளைப்பெற்றவர்கள்
- சாதி, சமய, ஆசாரக் கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்டவர்கள்



agaram.lk
Scanned with CamScanner

iii) • ஈழத்துச் சித்தர்களில் ஒருவராக விளங்குபவர்
நவநாதச்சித்தர் இவர் ஒரே நேரத்தில் ஒன்பது இடங்களில் தோற்றமளிப்பவராகையால் இப் பெயரைப் பெற்றார்.

• பல அற்புதங்களை சித்துக்களை செய்து காட்டியுள்ளார்.
உதாரணம் .. அம்மையார் விட்டு வந்த ஜெபமாலை இவரை நினைத்தவுடன் கிடைக்கப்பெற்றமை
- தந்தி கிடைக்க முன்பாகவே பெருமாள் அம்மையாரது கோயில் கும்பாபிசேகத்திற்கு வருகை தந்தமை
- நீரின்றி வரண்டு போய்க் காணப்பட்ட பெருமாள் கோயிற் கிணற்றில் நீர் சுரக்கச் செய்தமை
சித்துக்கள் நிறைந்தவர் ....

(5 புள்ளிகள்)

) i) • பல்லவர் காலம் என்பது கி.மு 6 – 9 ம் நூற்றாண்டு வரையான காலப்பகுதி
• சங்கமருவிய கால பிற்பகுதியில் சைவவைணவ நெறிகளை வளர்ப்பதில் காரைக்காலம்மையாரும், முதல் மூன்று ஆழ்வார்களும் செயற்பட்டனர். அதுவே பல்லவர்காலம் நாயன்மார்கள், ஆழ்வார் தோன்றி பக்தி இலக்கியம் வளர்ச்சி பெற வழிவகுத்தது.
உதாரணம் - சம்பந்தர், அப்பர் ...
• நாயன்மார்கள், ஆழ்வார்களின் தலயாத்திரை
• ஆலயச்சூழல், இறைவன், இறைவியரைப் போற்றி பதிகங்கள் பாடியமையால் பக்தியியக்கம் வளர்ச்சி பெறல்
• இக்காரணங்களால் சைவ, வைணவ பக்தியியக்கம் எழுச்சியும், வளர்ச்சியும் பெற்றது

ii) • பல்லவ மன்னர்கள்
- மகேந்திரவர்மன்
- இராஜசிம்மன்
- நரசிம்மவர்மன்
• பல்லவர்கள் குடைவரை, மலைதளி, கற்றளி, முறையில் அமைந்த ஆலயங்கள் பலவற்றைக் கட்டினர்
உதாரணம் - மகாபலிபுரம் கடற்கரைக்கோயில் காஞ்சி கைலாசநாதர் கோயில்
பனைமலைக் கோயில்
ஏகாம்பரநாதர் கோயில்
ஈஸ்வரன் கோயில்
• நாயன்மார்கள் தலயாத்திரை செய்வதற்கு இவர்களால் அமைக்கப்பட்ட ஆலயங்களே காரணமாதல்

• இயற்கை சக்திகளின் தாக்கத்திற்கு உட்படாத வகையிலான வலுமிக்க ஆலயங்களும் அமைக்கப்படல்
உதாரணம் - மகாவலிபுரம் கடற்கரைக்கோயில்
• பல்லவர்காலம் கட்டிடக்கலை வரலாற்றில் உன்னதமான காலம் எனப்பட ஓர் காரணம் அக்கால மன்னர்களால் அமைக்கப்பட்ட ஆலயங்கள்

iii) • பல்லவ மன்னர்கள் - மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன், இராஜசிம்மன்
• மகேந்திரவர்மன்
- முதன்முதலில் அழியாத பொருளைக் கொண்டு ஆலயம் அமைத்த பெருமை
- குடைவரை முறையிலான ஆலயங்களை அமைத்தல்
உதாணரம் - 10 குகைக் கோயில்கள்



agaram.lk
Scanned with CamScanner

- ஆலயச் சுவர்களில் ஓவியங்களை வரைந்து அழகுபடுத்துதல்
  உதாரணம் - சித்திரகாரப்புலி என சிறப்பிக்கப்படல்

• நரசிம்மவர்மன்
  - மலைதளி ஆலயங்கள்
  - உதாரணம் மண்டபங்கள்
  - 8 ரதங்கள்

• இராஜசிம்மன்

• கற்றளி முறையிலான ஆலயங்களை அமைத்தான்
  உதாரணம் - காஞ்சி கைலாசநாதர் கோயில் மகாவலிபுரம் கடற்கரைக் கோயில்
  28 ஆகமங்களையும் பொறித்து ஆகமமுறைப்படி ஆலயம் அமைத்தமை
  ஆகமப்பிரியன்
  உதாரணம் - காஞ்சி கைலாசநாதர் ஆலயம்
  இவ்வாறு பல்லவ மன்னர்கள் சைவ, வைணவ நெறிகள் வளர்வதற்கு ஆலயங்களை அமைத்தமையால் சமயநெறிகள் தழைத்தோங்கின. (7 புள்ளிகள்)

) i) • கோயிலின் முக்கியத்துவம்
• இறைவனின் திருவருள் பொலிந்து விளங்குமிடம்
• ஆகமசிற்ப நூல்கள் கூறும் கோயிலின் சிறப்புப் பற்றிய கருத்துக்கள்
• எங்கும் பரந்து வியாபித்து நிற்கும் பரம்பொருள் குறிப்பிட்ட மூர்த்தியில் சாந்நிநித்தியம் பெற்று விளங்குமிடம்
• கோயில் கருத்து விளக்கம்
• ஆலயம் கருத்து விளக்கம்
• ஆலயம் தொழுவது சாலவும் நன்று" – ஔவையாரின் கூற்று விளக்கம்
• மனித வாழ்வில் கோயில் வழிபாட்டின் முக்கியத்துவம்

**கோயிலுக்குச் செல்பவர்கள் கைக்கொள்ள வேண்டிய ஆசாரங்கள்**
• உடற்தூய்மை பேண வேண்டும்
• தோய்த்துலர்ந்த ஆடை அணிதல் வேண்டும்
• தேங்காய், பழம், பாக்கு, வெற்றிலை, கற்பூரம் போன்ற நிவேதனப் பொருட்களை எடுத்துச் செல்ல வேண்டும். (6 புள்ளிகள்)

ii) • முதலில் தூலலிங்கமாகிய கோபுரத்தைக் கண்டவுடன் வழிபட வேண்டும்.
• அடுத்து துவாரபாலகரிடம் அனுமதி பெறல் வேண்டும்
• அடுத்து பலிபீடத்தில் நான் என்ற அகந்தையைப் பலியிடல் வேண்டும்.
• பலிபீடத்தையும் துவசதம்பத்தையும் இடப தேவரையும் கும்பிட்டு பலிபீடத்துக்கு இப்பால் வடக்கு நோக்கிய சந்நிதியாயினும் மேற்கு நோக்கிய சந்நிதியாயினும் வலப்பக்கத்தில் நின்று கொண்டு ஆடவர் அட்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்தல் வேண்டும்.
• வழிபாடு – வழி + பாடு
  இறையருள் வழிப்படுத்தலே வழிபாடாகும்.
• பிறருக்குத் துன்பம் நேராத வகையில் வழிபாடாற்றுதலே ஆகமம் கூறும் ஆலய வழிபாடாகும்.
• இறைசாந்தித்தியத்தை ஏற்படுத்தும் பொருட்டு திருக்கோயில் கிரியை வழிபாட்டைச் செய்யும் சிவாச்சாரியார்களை வணங்கி அவர்களின் ஆசிபெற வேண்டும்.
• ஆலயத்தில் வழிபாடாற்றும் அடியார்களை முறைப்படி வழிபடுதல் வேண்டும்


agaram.lk
Scanned with CamScanner

- மூலவரையும் பரிவார மூர்த்திகளையும் முறைப்படி வழிபடுதல் வேண்டும்.
- ஈற்றில் சண்டேஸ்வரரையும் வழிபட்டுப் பலனைப்பெற வேண்டும்.
- வழிபாட்டின் முடிவில் இறை பிரசாதத்தையும் பெற்று முறைப்படி அதனைப் பேணுதல் வேண்டும்.

(7 புள்ளிகள்)

iii)
- நைதித்திய உற்சவங்களில் தலைசிறந்ததாகக் கருதப்படுவது மகோற்சவம்
- நித்தியக்கரியைகளின் போது ஏற்படும் குற்றம் குறைகளுக்குப் பிராயச்சித்தமாக அமைவது மகோற்சவக்கிரியை
- திருவருளை மிகுதியும் பெற்றுக்கொள்ளும் காலமாகிய மகோற்சவத்தில் தர்மகர்த்தா என்ற வகையில் ஆலயத்தில் அடியார் ஒழுங்காகச் சென்று இறையருளைப் பெறுவதற்கு வசதிகளைச் செய்தல்
- ஆலயத்தின் அகப்புறச் சூழல்களைப் புனிதமாக வைத்திருத்தல்
- ஆலயத்தொண்டர் சபையை நெறிப்படுத்தி அடியவர்களுக்குசேவை செய்வித்தல்
- அடியவர்களுக்கு தங்குமிட வசதியளித்தல்
- சுகாதார வசதியளித்தல்
- அடியவர்களின் அனைத்துத் தேவைகளையும் பூர்த்திபண்ணும் பொருட்டு சேவைகளை மேற்கொள்ளல்
- அடியார்களை இறைவனுடைய கருணையைப் பெறும் பொருட்டு சிறந்த கதாப்பிரசங்கம் தெய்வீகஇசை, நடனம், நாட்டியம், நாடகம் முதலான நிகழ்வுகளை ஏற்படுத்தல்

08) i) திருவாவடுதுறை ஆதீனம்

காலம் - நாயக்கர் காலம்
அமைவிடம் - நாகபட்டினம் மாவட்டத்தில் மயிலாடுதுறை கும்பகோணம் சாலையில் உள்ளது.
பரம்பரை - திருக்கைலாச பரம்பரை, மெய்கண்ட சந்தானம்
நிறுவியவர் - நமசிவாயமூர்த்திகள்
சீடர்கள் - குழந்தை சிவப்பிரகாசம், மறைஞான தேசிகர் அம்பலவாணதேசிகர்
கிளைமடங்கள் - 136
பிரதான நூல்கள் - மெய்கண்ட சாத்திரங்கள்
தசகாரியங்கள்
அதிசயமாலை
சமயப்பணி - கிளைமடங்களை நிறுவல்
சமூகப்பணி

- குருகுலங்களை அமைத்தல்
- மேல்நிலைப் பள்ளிகள் அமைத்தல்
- சுருக்கெழுத்தப் பள்ளிகளில் கணனி கற்பித்தல்
- நூல் வெளியீடு செய்தல்

ii) நடராஜமூர்த்தம்
- சிவனது நர்த்தன வடிவங்களில் ஒன்று
- 3 கண், 4 தோள், 4 கைகள் உடையதாக இருத்தல்
- சாந்தகுணம், சிவப்புநிறம், புன்முறுவல் செய்யும் முகம்

தத்துவம்

1. ஐந்தொழில் தத்துவம்

படைத்தல் - வலக்கை ஏந்திய கை
காத்தல் - அபயகரம்
அழித்தல் - தீ ஏந்திய கரம்
மறைத்தல் - ஊன்றிய திருவடி
அருளல் - தூக்கிய திருவடி



agaram.lk
Scanned with CamScanner

2. நடராஜ வடிவம் நூல் ஆக்கும் பஞ்சாட்சரங்களுடன் தொடர்புபடுத்தப்படல்

ந – திருவடி

ம – திருவயிறு

சி – திருத்தோள்

வா – திருமுகம்

ய – திருமுடி

சமயசமூக முக்கியத்துவம்

- சைவசித்தாந்த கோட்பாட்டை எடுத்துக்காட்டல்
- சிவன்கோயில்களில் நடராஜ வடிவம் இடம்பெறும்
- சிற்பவிக்கிரகக் கலையுடன் தொடர்புடையது
- மார்கழித் திருவாதிரையுடன் தொடர்புடையது

3. பெரியாழ்வார்

- வைணவ ஆழ்வார்களுள் ஒருவர்
- பெரியாழ்வார் திருமொழி இயற்றியமை
- விஷ்ணுசித்தர் - இயற்பெயர்
- முகுந்தப்பட்டர் - தந்தை
- பதுவல்லி – தாய்
- 473 பாசுரங்களைப் பாடியமை
- ஆனிச்சுவாதி நன்னாளில் பிறந்தார்
- இவரது பாசுரங்களே நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்தில் முதலாவதாக வைக்கப் பட்டுள்ளது.

4. சூரிய வழிபாடு

- அறுவகைச் சமய நெறிகளில் ஒன்று
- சூரியனைப் பரம்பொருளாக கொள்ளுதல்
- தொன்மை, வரலாறு, சடங்குமுறை வழிபாடு, பிரமாண நூல்கள், சமுதாய முக்கியத்துவம், பிரதான ஆலயங்கள் முதலியன.
- வாழ்வியலில் சூரிய வழிபாடு

5. விக்கிரகவியல்

- விக்கிரகக்கலையின் தோற்றம் சோழர்காலம்
- வார்ப்புக்கலை தோற்றம் பெற்றது
- விக்கிரகம் செய்யும் முறை பற்றி மானசாரம் எனும் நூல் உதவுகிறது
  - சலவிக்கிரகம் - நகர்த்தக்கூடியது
  - அசல விக்கிரகம் - நிலையாக வைப்பது
  - சலாசல விக்கிரகம் - நகர்த்த முடியும் முடியாது
- விக்கிரகம் செய்யும் முறை

6. கந்தசஷ்டி

- முருகனுக்குரிய விரதங்களில் ஒன்று
- காலம் - ஐப்பசி மாதத்து தீபாவளி அமாவாசையை அடுத்து வரும் வளர்பிறையில் பிரதமை தொடக்கம் சஷ்டி வரையுள்ள 6 நாட்கள்
- செல்வங்கள், சுகபோகங்கள், நற்புத்திரப்பேறு என்பவற்றை முன்னிட்டு முருகனை குலதெய்வமாகவோ, இஷ்ட தெய்வமாகவோ கருதி வழிபடுவர்
- முருக பக்தர்கள் ஒரு கடும் தவமாகக் கொண்டு ஆறு நாட்களும் உபவாசம் இருப்பர். இயலாதவர்கள் 5 நாட்கள் ஒரு வேளை உணவு உண்ணுதலும் 6 ம் நாள் உபவாசம் இருப்பர்.

விரத நியதிகள்

- விரதத்துக்கு முதல் நாள் அமாவாசைத் தினத்தில் ஒரு வேளை உணவு உண்ணல்
- தொடக்க நாளில் ஆலயத்தில் தர்ப்பையணிந்து காப்புக்கட்டல்
- 6 நாட்களும் முருகன் ஆலயத்தில் இறைவழிபாடு செய்தல் புராணபடனம் செய்தல்
- 7ம் நாள் அதிகாலை நீராடி அனுஷ்டானங்களை நிறைவேற்றி பாரனைப் பூசை முடிந்ததும் மாகேசுர பூசை செய்து விரதத்தைப் பூர்த்தி செய்தல்.

(4 x 5 = 20 புள்ளிகள்)



agaram.lk

Scanned with CamScanner